4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.91/2013**

**நாள்: 09.08.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பங்கஜவள்ளி | தொழில் | : |
| க/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வயது 58. நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1987 ஆம் வருடம் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன்னர் நான் உடுமலைப்பேட்டையில் எனது அப்பா அம்மாவுடன் வசித்து வந்தேன். திருமணத்திற்கு பின்னர் 4 வருடம் கேரளா கொச்சியில் எனது கணவருடன் வசித்து வந்தேன். பின்னர் பொள்ளாட்சி வந்து குடிவந்துவிட்டேன். எனது கணவர் இறந்த பிறகு எனது அப்பா, அம்மாவுடன் உடுமலைப்பேட்டையில் குடியிருந்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனது சகோதரர்கள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சொத்தில் பாகபிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். ஒரே ஒரு சாகோதரர் மட்டும் தான் பாகம் கொடுக்க மறுக்கிறார். 2–ஆம் பிரதிவாதி எனக்கு எதிராக இந்த வழக்கை நடத்துகிறார். 2 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் சொத்தில் வில்லங்கம் இருக்கிறதா என

நான் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்துள்ளேனா என்றால் பார்த்தேன். வில்லங்கம் இல்லை. வில்லங்க சான்றிதழ் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்யும் போது தாவா சொத்து, 2 ஆம் பிரதிவாதி பெயரில் இருந்ததா அல்லது அவர் சொத்துக்களை வேறு நபர்களுக்கு எழுதி வைத்திருந்தாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2 ஆம் பிரதிவாதி சொத்துக்களை அவரது மனைவி பெயரிலும் பிள்ளைகள் பெயரிலும் எழுதி வைத்திருந்ததை தெரியாது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி அவரது மனைவி மற்றும் மகன் பெயருக்கு 28.02.1986 அன்று ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்தவழக்கில் 2 ஆம் பிரதிவாதியின் மனைவி கோமதிநாயகம் அவசிய தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள பாகங்களை 3, 4 பிரதிவாதிகள் கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் அவர்களது சொத்துக்களை விற்பனை செய்துவிட்டதால் இந்த வழக்கை நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன். தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் நான் இருப்பதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசுசான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் R.C.நடராஜன் 28.06.2002 அன்று காலமாகிவிட்டார். எனது தகப்பனார் எந்த முகவரியில் இருந்து இறந்தார் என்றால் எண்.7, சௌந்தராஜன் லேஅவுட், தாராபுரம் ரோடு, உடுமலைப்பேட்டை. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை நான் பெற்றுள்ளேன். எனது தகப்பனார் இறந்தபிறகு 11 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இடையில் பைசல் பேசப்பட்டதால் காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் எனது சகோதரர்களுக்கு சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்த விவரம் என்க்கு தெரியுமா என்றால் பாகம் எதுவும் பிரித்து

கொடுக்கவில்லை. எனது தகப்பனாருக்கு பொய் சொல்லக்கூடிய பழக்கமோ, பொய் ஆவணம் தயார் செய்யக்கூடிய பழக்கமும் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் மீது சௌந்தர்ராஜன் என்பவர் ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு 1994 ஆம்ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உடுமலை சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இந்த விவரத்தை 2 ஆம் பிரதிவாதி அவரது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் தவறாக சொல்லியுள்ளார். சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில், எழுத்துமூலமான குடும்ப ஏற்பாடு மூலமாக அவரது சொத்துக்களை அவரது சொத்துக்களை எனது சகோதரர்களுக்கு பிரித்து கொடுத்திருப்பதாகவும், அதற்கு பிறகு அவரது பெயரில் சொத்து எதுவும் இல்லை என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

**2 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படியும் சாட்சியின் ஒப்புதலின்படியும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

V JOHN MINO

Digitally signed by V JOHN MINO
Date: 2024.08.09 17:27:14 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.